25.11.2016

தினமலர்

## 70 சென்ட் நிலம் 120 மரங்கள் லாபம் ரூ.3 லட்சம்



### 'நோட்டு' எண்ண 'நாட்டு' முருங்கை ஏற்றது

இயற்கை உரங்களை பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்வது 'லேட்டஸ்ட்' தொழில்நுட்பமாக மாறி வருகிறது. விவசாயத்தில் ரசாயன உரம், பூச்சிகொல்லி மருந்துகளை பயன் படுத்துவது வெகுவாக குறைந்து வருவது ஆரோக்கியமானது.

முழுக்க முழுக்க இயற்கை உரங்கள், இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பயிர், செடி வகைகளை சாகுபடி செய்யும் விவசாயிகளை வேளாண்மைத்துறை ஊக்குவித்து வருகிறது. இப்பயிர் வகைகள் ஏற்றுமதி தரம் வாய்ந்ததாக இருப்பதால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது.
இந்த வரிசையில் திண்டுக்கல் மாவட் டம் கொடைரோடு அருகே பள்ளப்பட்டியை சேர்ந்த முன்னோடி விவசாயி சடையாண்டி இயற்கை

முறையில் 'நாட்டு முருங்கை' சாகுபடி செய்து வளமான வருமானம் ஈட்டி வருகிறார்.

**'விண் பதியம்' தொழில்நுட்பம்**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே, வலையபட்டியில் நாட்டு முருங்கை குச்சிகளை வாங்கி வளர்த்தார். அதிலிருந்து வரும் கிளைகளில் 'விண் பதியம்' எனும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான நாற்றுகளை உற்பத்தி செய்கிறார். இதற்காக நன்கு வளர்ந்த முருங்கை கிளையின் தடிமனான தண்டுப்பகுதியின் தோலை 1 இஞ்ச் அளவில் வட்டமாக வெட்டி எடுக்கின்றனர்.

தோல் உரித்த தண்டுப்பகுதியை சுற்றிலும் பஞ்ச கவ்யம், அசோஸ் பைரில்லம், கந்தக சக்தி கொண்ட ஈயம், வேப்பம் புண்ணாக்கு, பதப் படுத்தப்பட்ட எரு ஆகியவற்றின் சம அளவிலான கலவையை கைப்பிடி எடுத்து தண்டுப்பகுதியை சுற்றிலும் வைத்து அதன் மீது பிளாஸ்டிக் கவரால் மேலும், கீழும் கட்டி விடுகின்றனர். 40 நாள் கழித்து தோல் உரிந்த தண்டுப்பகுதியில் வேர் துளிர் விட்டிருக்கும்.

அதை வெட்டி எடுத்து மண்புழு உரம் கலந்த பிளாஸ்டிக் பாக்கெட்களில் வைத்து 40 டிகிரி வெப்ப நிலையில் 'சேம்பரில்' பராமரிக்கின்றனர். பின் வெயிலில் 30 நாட்கள் வைத்து நாட்டு முருங்கை நாற்றுகளை தலா 35 ரூபாய்க்கு விற்கின்றனர்.

இத்தொழில்நுட்பத்தை 15 ஆண்டுகளாக கடைப் பிடித்து நாட்டு முருங்கை சாகுபடியில் வாட்டம் குறையாத லாபம் ஈட்டி சாதனை படைத்து வருகிறார்.

**லாபம் ரூ.3 லட்சம் சடையாண்டி கூறியதாவது:** பள்ளப்பட்டியில் 15 ஏக்கர் பரப்பளவில் நாட்டு முருங்கை சாகுபடி செய்கிறேன். தமிழகம் உட்பட பல்வேறு வெளி மாநிலங்களுக்கும் நாட்டு முருங்கை நாற்றுகளை அனுப்பி வருகிறேன்.

உதாரணமாக கொடைரோடு அருகே ராமராஜபுரம் விவசாயி பாலசுப்பிரமணியன் தோட்டத்தில் என்னிடம் வாங்கிய நாட்டு முருங்கை

நாற்றுகளை 70 சென்ட் பரப்பளவில் நான்கு ஆண்டுகளுக்கு முன் நடவு செய்தார். இதற்காக அவரின் மொத்த செலவு அப்போது ஆறாயிரம் ரூபாய்.

நடவு செய்த 120வது நாளில் இருந்து காய்ப்புக்கு வந்து விட்டது. 70 சென்ட் நிலத்தில் 120 மரங்கள் உள்ளன. தற்போது முருங்கை சீசன் குறைவு. எனினும் 120 மரங்களிலும் சடைசடையாய் முருங்கை காய்த்துள்ளன. ஒரு கிலோ முருங்கைக்காய் 30 ரூபாய். சீசன் நேரத்தில் விலை மும்மடங்காக உயரும். இந்த சீசனுக்கு மட்டும் 3 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. ஆண்டுக்கு மூன்று காய்ப்பு எடுக்கலாம். கால்நடை எருவை பயன்படுத்தி முறையாக பராமரித்தால் 50 ஆண்டுகள் வரை முருங்கையில் தொடர்ந்து லாபம் எடுக்க முடியும். நெல், கரும்பை ஒப்பிடும்போது தண்ணீர் தேவை மிக மிகக் குறைவு. கீரை, முருங்கைக்காய், முருங்கை விதைகளை பதப்படுத்தி பெருமளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர் என்றார். நாட்டு முருங்கை தொழில்நுட்பம் குறித்து 97913 74087 ல் கேட்கலாம்.

**விவசாயி பாலசுப்பிரமணியன் கூறியதாவது**: நாட்டு முருங்கை சாகுபடியில் செலவு மிகக்குறைவு. லாபம் பல மடங்கு என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ளோம்.
நாள் முழுக்க வயலில் இருக்க வேண்டிய அவசியம் இருக்காது. காலை, மாலை தலா 30 நிமிடங்கள் செலவிட்டால் போதும். பூமி வறண்டு விட்டால் மட்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மரங்களுக்கு தேவையான அளவு கால்நடை எருவை உரமாக இட வேண்டும். முருங்கையில் இரும்பு சத்து உள்ளிட்ட பல சத்துக்கள் நிறைந்து இருக்கிறது. சைவ உணவில் முருங்கையை தவிர்க்க இயலாது என்பதாலும், இதன் மவுசு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. பண 'நோட்டு' எண்ண, 'நாட்டு' முருங்கை சாகுபடி ஏற்றது என்றார்.
**- கா.சுப்பிரமணியன், மதுரை**

**வறட்சியை தாக்குப்பிடிக்கும் சிறுதானிய சாகுபடிக்கு மானியம்**



தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சோளம், கம்பு, சிறுதானியங்கள், மக்காச்சோளம் எக்டேருக்கு 4 ஆயிரம் ரூபாய். நுண்ணூட்டச்சத்து கலவை விநியோகம் எக்டேருக்கு 500 ரூபாய் அல்லது 50 சதவிகிதம் மானியம் உண்டு. பயிறு வகை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 சதவிகிதம் டி.ஏ.பி., இலைவழி உரம் தெளிக்க எக்டேருக்கு 650 ரூபாய் அல்லது 50 சதவிகிதம்.

வரப்பில் பயிறு சாகுபடிக்கு எக்டேருக்கு 150 ரூபாய். தரமான விதை உற்பத்தி ஊக்கத்தொகை (15 ஆண்டுக்கு உட்பட்டது) மெட்ரிக் டன்னுக்கு 25 ஆயிரம் ரூபாய். வரிசை விதைப்பு பயிர், ஆழச்சால் அகலப்பாத்தி முறையில் பயிர் எண்ணிக்கை பராமரித்தல் எக்டேருக்கு 1000 ரூபாய் அல்லது 50 சதவிகிதம். விழிப்புணர்வு பயிற்சிக்கு 4000 ஆயிரம் ரூபாய் என மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் மானியங்களை முழுமையாக பெற்று பயனடைய அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம்.

## 'ஆப் சீசனிலும்' காய்கறி, பழங்கள் அசத்துகிறார் திண்டுக்கல் 'லியோ'




திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு மெட்டூர் கேட் அருகே விவசாய தோட்டம் உள்ளது. இங்கு பயிர்களுக்கு இயற்கை உரங்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

'ஆர்கானிக் பவர் பிளஸ்' என்ற நுண்ணூட்ட ஊக்கியை கண்டுபிடித்து பயிர் சாகுபடியில் பயன்படுத்துகின்றனர். இது பயிர்களை தாக்கும் பூச்சிகளை விரட்டும் மருந்தாகவும், 'சீசன்' இல்லாத நேரத்திலும் மகசூல் பெறும் வகையில் பயிர்களுக்கான 'ஊக்கி'யாகவும் பயன்படுகிறது. வேர் அழுகல், தண்டு அழுகல் நோய்களை கட்டுப்படுத்துகிறது. பயிர்களை பாதிக்கும் பூஞ்சான நோய்களையும் கட்டுப்படுத்துகிறது. நாவல் பழத்தைப் பொறுத்தவரை, பிப்ரவரியில் துவங்கி ஜூலையில் சீசன் முடிந்து விடும். மல்லிகைப்பூ பனிக் காலத்தில் பூக்காது. குறிப்பாக டிசம்பர், பிப்ரவரி மாதங்களில் மல்லிகைப்பூ விலை ஆயிரம் ரூபாயை தாண்டும். சீசன் அல்லாத நேரங்களிலும் இந்த நுண்ணூட்ட ஊக்கியை பயன்படுத்தி, மல்லிகையை விளைவிக்க முடியும் என நிரூபித்துள்ளனர்.

### நுண்ணூட்ட ஊக்கி

இந்த ஊக்கி, சாணம், கோமியம், தயிர், நெய், பால் ஆகிய பஞ்ச கவ்யத்துடன் சப்போட்டா, நெல்லி, அன்னாசி, எலுமிச்சம், சாத்துக்குடி ஆரஞ்சு பழத்தின் தோல், மீன் கழிவுகள், நிலக்கரி படிமம் ஆகியவை கலந்து தயாரிக்கப்படுகிறது.

இறுதியில் அசோஸ்பைரில்லம், ரைஸ்சோபியம், சூடோமோனாஸ் ஆகியவையும் கலக்கப்படுகிறது. இது முழுக்க, முழுக்க இயற்கை நுண்ணூட்ட ஊக்கியாக உள்ளது. மல்லிகைப்பூ, ரோஜா, நாவல், திராட்சை உட்பட பல பயிர்களுக்கும் 10 லிட்டர் தண்ணீரில் 50 மி.லி., கலந்து 20 நாட்களுக்கு ஒரு முறை என ஏக்கருக்கு ஒரு லிட்டர் தெளிக்க வேண்டும். இதன் மூலம் சீசன் இல்லாத நேரங்களிலும் பூக்கள், காய்கள் காய்க்கும்.

**இதனை தயாரித்து பயன்படுத்தும் விவசாயி சி.லியோ கூறியதாவது:** பொறியியல் படித்துள்ளேன். இயற்கை விவசாயத்தில் மிகுந்த ஆர்வம் உண்டு. இதனால் இந்த நுண்ணூட்ட ஊக்கியை கண்டுபிடிக்க முடிந்தது.

இது முழுவதும் இயற்கை பொருட்களால் தயாரிக்கப்படுகிறது. இந்த ஊக்கி குறித்து விவசாயிகளுக்கு இலவச பயிற்சியும் அளிக்க உள்ளேன். ஒரு லிட்டர் ரூ.250க்கு விற்பனை செய்கிறேன். இதனை பயன்படுத்துவதால் பிஞ்சுகள் அதிகரிக்கும். பூக்கள் அடர்த்தியாக, காய்கள் பளபளப்பாக இருக்கும், என்றார். தொடர்புக்கு 98659 25193ல் தொடர்பு கொள்ளலாம்.
**- எஸ்.அரியநாயகம், திண்டுக்கல்.**

தினமணி

**மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கல்**



ரிஷிவந்தியத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விவசாயி காந்தி தலைமை வகித்தார். விவசாயி சேட்டு முன்னிலை வகித்தார். விவசாயி இளங்கோவன் வரவேற்றார். விழாவில் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் க.முருகன், வேளாண் உதவி அலுவலர் பிரபு ஆகியோர் தமிழக அரசின் சாதனைகள் குறித்து விளக்கமாகப் பேசினர். இதில் விவசாயிகளுக்கு 40 சதவீதம் மானிய விலையில் பவர்டில்லர் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

**பருவநிலைக்கு ஏற்ப நெல், மணிலா பயிரிடலாம்: வேளாண் அதிகாரி அறிவுரை**



தற்போதைய பருவநிலைக்கு ஏற்ப விவசாயிகள் நெல், மணிலா ரகங்களை சாகுபடி செய்யலாம் என வேளாண் உதவி இயக்குநர் அறிவுறுத்தினார் விழுப்புரம் அருகே கோலியனூர் வேளாண் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மணிலா விதை விநியோகம் அண்மையில் தொடங்கியது. வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தொடங்கி வைத்துப் பேசியது:

இந்தாண்டு பருவமழையின்றி அசாதாரண சீதோஷ்ண நிலை உள்ளது. நிலவி வரும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மோட்டார் பாசனம், திறந்தவெளி கிணறுகளில் போதுமான நீர்வளம் இருக்கும் விவசாயிகள், குறைந்த கால வயதுடைய கோ-51 நெல் ரகத்தை பயிரிடலாம்.

இந்த ரகம், 105 முதல் 110 நாள்கள் வயதுடையது. சன்ன ரகம். ஏக்கருக்கு 2500 முதல் 3000 கிலோ வரை மகசூல் அளிக்கக்கூடியது. வெள்ளை பொன்னிக்கு அடுத்த நிலையிள் விலை கிடைக்கும். ஆகையால், நீர்வளம் உள்ள விவசாயிகள் கோ-51 நெல் ரகத்தை, பிந்தைய சம்பா மற்றும் நவரை பருவத்துக்கு தேர்வு செய்யலாம். இந்தாண்டு நிலவி வரும் சீதோஷ்ண நிலையை கருத்தில் கொண்டு கோ-51 ரக நெல் விதைகள் சுமார் 100 மெ.டன் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கிலோவுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது. பாசன நீர்த் தேவையை குறைத்திட இயந்திர நெல் நடவு செய்திட வேண்டும். இயந்திர நடவு விவசாயிகளுக்கு டெக்டேருக்கு ரூ.5,000 மானியம் வழங்கப்படுகிறது. நீர்ப் பாசனம் குறைவாக உள்ள பகுதிகளில் உளுந்து, மணிலா, கம்பு, மக்காச்சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம். 1 ஏக்கர் நெல் பயிருக்கு தேவைப்படும் நீரினைப் பயன்படுத்தி 4 முதல் 5 ஏக்கர் வரை உளுந்து, மணிலா, கம்பு, மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம். போதுமான உளுந்து, மணிலா விதைகள், கிலோவுக்கு ரூ.25 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார். வேளாண் அலுவலர்கள் செந்தில்குமார், கங்காகெப்ரி, உதவி அலுவலர்கள் சுரேஷ்குமார், ரவிச்சந்திரன், அமிர்தலிங்கம், சீனுவாசன், ஏழுமலை, பழனி மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**நெற்பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரி ஆலோசனை**



நெற்பயிரில் மாவுப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரசன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

மேல்புவனகிரி வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் மாவுப் பூச்சிகள் தாக்குதல் காணப்படுகிறது. குறிப்பாக சித்தேரி, மேலமணக்குடி, சாத்தப்பாடி பகுதிகளில் புழுதியில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் மாவுப்பூச்சிகள் தாக்குதல் காணப்படுகிறது. இதுதொடர்பாக கரும்பு ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் துரைசாமி, முனைவர் திருவரசன், மேல்புவனகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சீ.இளவரசன் ஆகியோர் வயல்களில் ஆய்வு செய்தனர்.

பின்னர் தாகுத்தலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து இளவரன் தெரிவித்துள்ளதாவது: பிரிவெண்ணியா ரெகி என்ற மாவுப்பூச்சி தாக்கப்பட்ட நெல் வயல்களில் பயிர் காய்ந்தும், வளர்ச்சி குன்றியும் காணப்படும். இலைகள் மஞ்சளாகவும், சுருண்டும் காணப்படும். சூரைநோய் தாக்கியது போல் திட்டு திட்டாக காணப்படும். தொடர் வறட்சி, புல் வகைக் களைகள் அதிகம் இருத்தல் போன்றவை இப்பூச்சியினம் தொடர்ந்து வாழ ஏதுவாக அமைகிறது. இறக்கையற்ற பெண் பூச்சிகள் மற்றும் இளம் பூச்சிகள் நெற்பயிரின் தண்டுக்கும், இலை உறைக்கும் இடையில் அமர்ந்துகொண்டு சாற்றினை உறிஞ்சி பயிரின் வளர்ச்சியை தடுக்கிறது. மேலும் காற்றின் மூலம் இப்பூச்சி வேகமாகப் பரவுகிறது.

இப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த, வரப்புகளில் காணப்படும் புல்வகை களைகளை அகற்றி சீர்செய்ய வேண்டும். பூச்சி தாக்கப்பட்ட செடிகளை அகற்றி அழித்தல் வேண்டும். தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் பியூப்ரோ பெஃசின் (25 நஇ)- 200மில்லி அல்லது தையோ மீத்தாக்சம் (25 ரஎ) என்ற பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் பதிவு: விவசாயிகள் ஆர்வம்**



மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெயர் பதிவு செய்யும் முகாம் புதுசத்திரம் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த முகாமில் ஏராளமான விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் நீண்ட வரிசையில் நின்று தங்களது பெயரை பதிவு செய்து கொண்டனர்.

ராபி பருவப் பயிர்கள் தற்போது மழை இன்மையால் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர். இந்நிலையில், ஏற்கெனவே இருந்து வந்த விவசாயிகளுக்கான தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் விவசாயிகளிடம் பிரீமியம் பெற்று பெயர் பதிவு செய்யப்படுகிறது.

இதன்படி விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட விளை பொருள்களுக்கான விலையில் 1.5 சதம் பிரீமியம் செலுத்தினால் போதுமானது. இதன் மூலம் புதுசத்திரம் வட்டாரத்தில் நெல், சோளம், மக்காச்சோளம், துவரை, உளுந்து, பாசிப்பயிறு, நிலக்கடலை, எள், பருத்தி, கரும்பு என சுமார் 2 ஆயிரம் ஹெக்டர் அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் மழையின்றி விளைச்சல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். அக்டோபரில் தொடங்கிய இதற்கான முகாம், இம்மாதம் 30-ம் தேதி வரை நடைபெறும் என உதவி வேளாண்மை இயக்குநர்கள் ஆர்.வரதராஜ் (புதுசத்திரம்), டி.கௌதமன் (கொல்லிமலை) ஆகியோர் தெரிவித்தனர்.

**பருவமழை பொய்த்ததால் மாற்றுப் பயிர் சாகுபடிக்கு விவசாயத் துறை ஆலோசனை**



தேனி மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், இரண்டாம் போக சாகுபடி நெல் வயல்களில் மாற்றுப் பயிராக குறுகிய கால பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களை பயிரிட, விவசாயத் துறை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடை மழை மற்றும் தென்மேற்குப் பருவமழை பொய்த்தது. கடந்த செப்டம்பர் மாதம் தொடங்கி தற்போது வரை வடகிழக்குப் பருவமழை 133.49 மி.மீ. மட்டுமே பெய்துள்ளது. இந்நிலையில், தற்போது மாவட்டத்தில் 14,500 ஏக்கர் பரப்பளவில் உள்ள இரு போக நெல் வயல்களில் முதல் போக நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் சில இடங்களில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு விவசாயிகள் நாற்றாங்கால் தயாரித்து வைத்துள்ளனர். ஆனால் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததாலும், பெரியாறு அணையில் தண்ணீர் இருப்பு குறைவாக உள்ளதாலும், நெல் நாற்றுகளை நடவு செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். எனவே, பருவமழை பொய்த்ததால் இரண்டாம் போக நெல் சாகுபடி வயல்கள் மற்றும் மானாவாரி நிலங்களில் குறுகிய கால பயிர்களான மக்காச்சோளம், எள், சாமை, கேழ்வரகு, குதிரைவாலி, கானம் போன்றவற்றை சாகுபடி செய்ய விவசாயத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

மேலும், நிலத்தில் ஈரப்பதத்தை தக்க வைக்க ஹைட்ரோ ஜெல் வேதிப்

பொருளை பயன்படுத்துவது போன்ற தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**கடலூர் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்: அமைச்சர் தொடங்கிவைத்தார்**

500, 1000 ரூபாய் நோட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டதை அடுத்து, நாட்டிலேயே முதல்முறையாக, கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் கடலூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.
மத்திய அரசு ரூ.1000, 500 ஆகிய நோட்டுகள் செல்லாது என கடந்த 8-ஆம் தேதி இரவு அறிவித்தது. இதையடுத்து நெல் சாகுபடி செய்துள்ள விவசாயப் பணிகளுக்கு பணம் இல்லாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில், தமிழக அரசு புதன்கிழமை புதிய அரசாணை வெளியிட்டது. அதில், ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்படும் என அறிவித்தது. இந்தத் திட்டம் தமிழகத்தில் முதல்முறையாக கடலூர் மாவட்டம், சிங்கிரிகுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வியாழக்கிழமை அமல்படுத்தப்பட்டது. இதில் 30 விவசாயிகளுக்கு ரூ. 6.39 லட்சம் கடனாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் த.பொ.ராஜேஷ் தலைமை வகித்தார். கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ விவசாயிகளுக்கு கடன் தொகையாக ரூ. 2 ஆயிரம், ரூ.100 நோட்டுக்களை வழங்கினார். இதைத் தொடர்ந்து, நல்லாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 31 பேருக்கு ரூ. 11.54 லட்சம் கடன் தொகையை அமைச்சர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேசியதாவது:
மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களை இணைத்து அவர்களுக்கு விவசாயக் கடன் வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்தத் திட்டத்தில் விவசாயிகள் ரூ. 24 ஆயிரம் ரொக்கமாகப் பெறுவதுடன், உரம், விதைகள், உழவு

இயந்திரம் மற்றும் இதர உபகரணங்களை வாடகைக்கு வழங்கவும், பயிர்க் காப்பீட்டுத் தொகையை விவசாயிகளின் பயிர்க்கடன் கணக்கில் வரவு வைக்கவும், தொடர்புடைய காப்பீட்டு நிறுவனத்துக்கு மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் 49 லட்சம் விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக ரூ. 23,214 கோடிக்கு குறுகியகால வட்டியில்லாக் கடன் வழங்க முதல்வர் இலக்கு நிர்ணயித்துள்ளார் என்றார் அவர்.

**மேட்டூர் அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 750 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. வியாழக்கிழமை காலை தண்ணீர் திறப்பு நொடிக்கு 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 275 கனஅடியாக சரிந்தது. அணையின் நீர்மட்டம் 41.43 அடியாகவும், நீர் இருப்பு 12.83 டி.எம்.சியாகவும் இருந்தது.

தி இந்து
தமிழால் இணைவோம்

இறக்குமதி குறைந்ததால் இந்திய ஏலக்காய் விலை உயர்வு



வெளிநாட்டு ஏலக்காய் இறக்குமதி குறைந்ததால், இந்திய ஏலக் காய்களுக்கு மவுசு அதிகரித்து கிலோ ரூ.1,500-க்கு விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம் போடி, கோம்பை, தேவாரம் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கேரளாவில் தங்கி கம்பம் மெட்டு, போடிமெட்டு, வண்டல் மேடு, தேவிகுளம், சூரியநல்லி, அடிமாலி, ராஜக்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சொந்த மாகவும், தோட்ட உரிமையாளர் களிடம் குத்தகைக்கு நிலம் வாங்கியும் 2,000 ஏக்கருக்கு மேல் ஏலக்காய் சாகுபடி செய்து வருகின்றனர். இப்பகுதியில் சாகு படி செய்யப்படும் ஏலக்காய்களை இந்திய நறுமண வாரியம் (ஸ்பைசஸ் போர்டு) மூலம், ஏலம் முறையில் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இதற்காக போடி, வண்டல்மேடு, சாந்தம்பாறை ஆகிய இடங்களில், இந்திய நறுமண வாரியத்தின் கீழ் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன.

தற்போது வெளிநாட்டில் இருந்து ஏலக்காய்கள் இறக்குமதி குறைந்துவிட்டதால், இந்திய ஏலக்காய்களுக்கு மவுசு அதி கரித்து விலை உயர்ந்துள்ளது. இதுகுறித்து ‘தி இந்து’விடம் ஏலக்காய் விவசாயிகள் சிலர் கூறியதாவது: இந்திய ஏலக்காய் கள் நறுமணம் அதிகமாக இருப்பதால், உலக சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது.

கடந்த ஆண்டு மத்திய அரசு இறக்குமதி வரிச் சலுகையை அதிகரித்துள்ளதால், இந்திய ஏலக்காய் விலை சரியத் தொடங்கியது. அப்போது விலை வீழ்ச்சி அடைந்து கிலோ ரூ.500 ஆக சரிந்தது. தற்போது இறக்குமதி குறைந்ததால் இந்திய ஏலக்காய்களை வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது தரத்துக்கேற்ப கிலோ ரூ.1,300 முதல் ரூ.1,500 வரை விலை போகிறது. இதனால் ஏலக்காய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றனர்.

நபார்டு வங்கி மூலம் விவசாயிகளுக்கு ரூ.21,000 கோடி ஒதுக்கீடு: மத்திய அரசு அனுமதி



கோப்புப் படம்

நபார்டு வங்கி மூலம் விவசாயி களுக்கு ரூ.21,000 கோடி பட்டுவாடா செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய பொரு ளாதார விவகாரத் துறை செயலர் சக்திகாந்த தாஸ் நேற்று செய்தி யாளர்களிடம் கூறியதாவது:

பணத் தட்டுப்பாடு காரணமாக குளிர்காலத்தில் மேற்கொள்ளப் படும் விவசாயப் பணிகள் தடைபடாமலிருக்க நபார்டு வங்கி மூலம் விவசாயிகளுக்கு பணப் பட்டுவாடா செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பழைய 500, 1000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறும் நட வடிக்கையால் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, வங்கி யில் பணம் எடுப்பதற்கு உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக விதை உள்ளிட்ட விவ சாயப் பொருட்களை வாங்க முடியாமல் விவசாயிகள் பெரு மளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, குளிர் பருவகால விவசாயப் பணிகளை மேற் கொள்ள முடியாமல் உள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, நபார்டு வங்கி மூலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி களுக்கு ரூ.21,000 கோடி வழங்க சிறப்பு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. இந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு அமைப்புகள், விவசாயி களின் கடன் தேவைகளை அறிந்து கடன்களை வழங்கும். இதன்மூலம் விவசாயிகள்

நடப்பு பருவ விவசாய நடவடிக்கைகளை தொய்வில்லாமல் மேற்கொள்ள முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.